S.T.C.No.1202/2019 Date:18.11.2022

**அ.சா.1** புஷ்பா

**(சாட்சி மனுவின்மீது திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

**குறுக்கு விசாரணை-**

1) நான் எங்கு வசிக்கிறேன் என்றால் சங்ககிரி சந்தபேட்டையில் உள்ள என் வீட்டிலும் செங்கமாமுனியப்பன்கோயில், பல்லக்காபாளையம் குட்டக்காட்டில் உள்ள எனது பூர்வீக வீட்டிலும் மாறி மாறி வசித்து வருகிறேன். கடந்த 2015 முதல் சங்ககிரி சந்தபேட்டையில் வசித்து வருகிறேனா என்றால் மாறி மாறி வசித்து வருகிறேன். என்னுடன் பிறந்தவர்கள் யார் என்றால் எனது தம்பி சுரேஷ் ஆகும். மேற்படி சுரேஷ் எங்கு வேலை செய்கிறார் என்றால் பெட்ரோல் பங்கில் வேலை செய்கிறார். அதற்கு முன்பு எங்கு வேலை செய்தார் என்றால் GR கேஸ் கம்பெனியில் சுமார் 5 ஆண்டுகள் வேலை செய்து வந்தார். அப்போது மேற்படி கம்பெனியின் உரிமையாளர் குணசேகரன் எனக்கு அறிமுகமானார் என்றால் என் மூலமாக தான் எனது தம்பிக்கு அவரை தெரியும். எனது தம்பியை எப்போது மேற்படி கேஸ் கம்பெனியில் வேலைக்கு சேர்த்துவிட்டேன் என்றால் 2006—ம் வருடம் சேர்த்துவிட்டேன் ஆனால் 4 வருடம் வேலை செய்துவிட்டு நின்றுவிட்டார்.

2) எதிரி நவீனை எனக்கு எப்படி தெரியும் என்றால் நவீனின் தாத்தாவான மேற்படி குணசேகரனுடன் நவீன் வரும்போது பழக்கமானார். அப்போது நவீனுக்கு எவ்வளவு வயது இருக்கும் என்றால் சுமார் 17 அல்லது 18 வயது இருக்கும். ரமேஷ் என்பவர் நவீனின் மாமாவா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது இரண்டு பேரும் ஒரே கம்பெனியில் இருக்கிறார்கள்.

3) ரமேசின் சகோதரிகள் ரமா மற்றும் பிரபா ஆகியோர்கள் எனக்கு பழக்கமானவர்களா என்றால் எனது பக்கத்துவீட்டில் வசித்து வந்தார்கள் அந்த வகையில் தெரியும். எனது எந்த வீட்டிற்கு பக்கத்தில் வசித்து வந்தார்கள் என்றால் பச்சக்காட்டில் நான் வாடகைக்கு கொடுத்துள்ள வீட்டிற்கு அருகில் வசித்து வந்தார்கள். மேற்படி ரமா மற்றும் பிரபா என்னிடம் பணம் வாங்கியுள்ளார்களா என்றால் இல்லை.

4) எந்த வருடத்தில் எதற்காக என்னிடம் நவீன் பணம் வாங்கினார் என்றால் 15.02.2019-ல் எனக்கு லோன் கிடைத்த விபரம் தெரிந்து 4 மாதத்தில் திருப்பி

தருவதாக கூறி கடன் வாங்கினார். பணம் எவ்வாறு என்னிடம் வாங்கினார் என்றால் நாங்கள் இருவரும் வங்கிக்கு சென்றோம் நான் அவருடைய கணக்கிற்கு பணத்தை பறிமாற்றம் செய்தேன். காசோலையை அப்போதே கொடுத்தாரா என்றால் இல்லை மாலையில் வீட்டிற்கு வந்து கொடுத்தார். என் முன்னிலையில் தான் காசோலையை நிரப்பி கையொப்பம் செய்து கொடுத்தாரா என்றால் இல்லை காசோலையை நிரப்பி கையொப்பம் செய்து கொண்டு வந்தார். நான்கு மாதம் கழித்து நவீனிடம் பணம் கேட்டேனா என்றால் அவரின் அலுவலகம் சென்று கேட்டேன். அப்போது என்ன கூறினார் என்றால் வங்கியில் காசோலையை வசூலுக்கு செலுத்தி பணம் பெற்றுக்கொள்ளுமாறு கூறினார் நான் வங்கிக்கு சென்று காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேன்.

5) காசோலை திருப்பப்பட்டபிறகு எதிரியிடம் சென்று அதுகுறித்து கேட்டு பிரச்சனை ஆனபிறகு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேனா என்றால் ஆமாம். நவீன் மற்றும் ரமேஷ் மீது புகார் கொடுத்தேனா என்றால் ஆமாம். அவர்களின் கம்பெனிக்கு சென்று கேட்டபோது அங்கு வேலை செய்த ஊழியர்கள் மூலம் என்னை அடித்ததால் தான் நான் மேற்படி புகாரை கொடுத்தேனா என்றால் ஆமாம். எந்த வருடம் புகார் கொடுத்தேன் என்றால் 2019-ம் வருடம் தேதி மற்றும் மாதம் ஞாபகமில்லை. நானும் எனது தம்பியும் புகார் கொடுத்தோமா என்றால் எனது தம்பியும் சேர்ந்துதான் என்னை அடித்தார் அதனால் நான் தான் புகார் கொடுத்தேன். அப்போது எனது தம்பி அங்கு தான் வேலை செய்து கொண்டிருந்தார் என்றால் சரிதான். நானும் எனது தம்பியும் சேர்ந்து தான் 12.09.2019-ம் தேதியில் மேற்படி நவீன் மற்றும் ரமேஷ் மீது புகார் கொடுத்தோம் என்றும் தற்போது அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் எனது தம்பி அங்கு வேலையில் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

6) நான் எந்த வங்கியில் கடன் பெற்றேன் என்றால் சுந்தரம் பைனான்ஸ். எவ்வளவு ரூபாய் கடன் வாங்கினேன் என்றால் 40 லட்சம். மேற்படி கடன் பெற்றது சம்பந்தமாக ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 17.12.2018-ல் எனது வங்கி கடனை அடைப்பதற்காக சுந்தரம் ேஹாம் பைனான்ஸ் லிமிடெட் கம்பெனிக்கு GR கம்பெனியிலிருந்து ரூ.22,24,656/- அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கேட்டுக்கொண்டதற்காக மேற்படி கடனை அடைத்தார்கள் என்றால் சரியல்ல.

7) எனது தம்பி மேற்படி கம்பெனியில் வேலை செய்தபோது கம்பெனிக்குண்டான வரவு செலவுகளை அவர் தார் பார்த்து வந்தார் என்றும் காசோலைகளை அவர் தான் வைத்திருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு வேலை செய்தபோது எனது தம்பி காசோலைகளை எடுத்து மறைத்து வைத்தார் என்பதால் தான் அவர் பணிநீக்கம் செய்யப்பட்டார் என்றால் சரியல்ல. என்னுடைய கடனை அடைத்ததால் தான் நான் எதிரிக்கு சுந்தரம் பைனான்சில் இருந்து லோன் வாங்கி கொடுத்தேன் என்றால் சரியல்ல. அவ்வாறு முறைகேடாக எனது தம்பி வைத்திருந்த காசோலையை பயன்படுத்தி இந்த வழக்கை மோசடியாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8) நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் எனக்கு 30 ஏக்கல் விவசாய நிலம் உள்ளது விவசாயம் செய்து வருகிறேன். எவ்வளவு வருமானம் உள்ளது என்றால் வருடத்திற்கு 10 லட்சம் வரும். ஆனந்தகுமார் என்பவர் எனக்கு உறவினர் என்றால் அவ்வாறு ஒரு நபரை எனக்கு தெரியாது. ஆனந்தகுமார் எனக்கு நன்கு அறிமுகமானவர் என்றும் வழக்கிற்காக அவரை எனக்கு தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9) காவல் நிலையத்தில் புகார் அளித்தபிறகு இவ்வழக்கு சம்பந்தமாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் ஆமாம். மேற்படி நான் கூறிய சங்கதிகள் அனைத்தும் வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும், முதல் விசாரணையிலும் தெரிவித்துள்ளேனா என்றால் கூறியுள்ளேன். என் மீது சங்ககிரி சார்பு நீதிமன்றத்தில் நவீன் , ரமேஷ் ஆகியோர் உரிமையில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் ஆமாம். செல்வம், இ.கே.பழனிசாமி, ஆனந்தகுமார், கோபால் மற்றும் மாணிக்கம் ஆகியோர்கள் மீதும் மேற்படி நவீன் மற்றும் ரமேஷ் ஆகியோர்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி நபர்கள் அனைவரும் எனக்கு உறவினர்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றும் எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2022.11.18 18:14:17 +0530

Sd/- Pushpa

Judicial Magistrate No.1,
Sankari.